**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.202/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாட்டுத்துரை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : வள்ளிமுத்து | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : போடுவார்பட்டி | வயது | : சுமார் 58 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 03.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கு பிரதிவாதி செல்வராஜ் என்பவர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் ? பெரியதுரையாண்கோவிலுக்கு வந்த வகையில் பழக்கம். செல்வராஜ் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ? அக்கரஹார குன்னத்தூர் ஆகும். அது எங்குள்ளது என்றால் ? பரமத்தி வேலூர் அருகில் உள்ளது. நான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் ? இல்லை. பிரதிவாதியின் குடும்பத்தில் யார் யார் உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? தெரியாது. ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள் என்ற விபரம் மட்டுமே தெரியும். பிரதிவாதி என்ன தொழில்செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? 5 ஏக்கர் நிலம் வைத்துள்ளார். கரும்பாலை போட்டு இருப்பதாக சொன்னார். பிரதிவாதி சொன்னதை வைத்து தான் தெரியும் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் ? சொன்னதை வைத்து தான் தெரியும். பிரதிவாதிக்கு வேறு எங்காவது கொடுக்கல், வாங்கல் உள்ளதா என்ற விபரம் தெரியுமா என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார் என்றால் ? பணம் கொடுத்த தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு கேட்டார். குறிப்பாக தேதி எனக்கு சரியாக தெரியாது

என்றால்? பணம் கொடுத்த தேதி தெரியும். அதற்கு முன்பு கேட்டது சரியான தேதி தெரியவில்லை. நான் ஏற்கனவே இதுபோல் பணம் யாரிடமாவது கொடுத்து வாங்கியுள்ளேனா என்றால் ? இல்லை. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் ? இல்லை. ஏற்கனவே நான் கடனுறுதிசீட்டு வாங்கி கொண்டு யாருக்கும் பணம் கொடுத்ததில்லை என்றால் ? இல்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ? விவசாயம் செய்து வருகிறேன். விவசாயத்தை தவிர வேறு எந்ததொழிலும் இல்லை என்றால் ? இல்லை. எனக்கு சொந்தமாக நிலம் உள்ளதா என்றால் ? 5 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும், குத்தகைக்கு பிடித்த 10 ஏக்கர் நிலம் ஓட்டி வருகிறேன். எனக்கு சொந்தமாக நிலம் உள்ளதற்கும், குத்தகைக்கு பிடித்து நிலம் ஓட்டுவதற்கும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ? தொகை ரூ.8,00,000 கொடுத்தேன். பணத்தை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் ? மார்க்கெட்டிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை கையில் வைத்திருந்து கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்தக்கூடிய பழக்கம் உள்ளதா என்றால் ? இல்லை. தொகை ரூ.20,000க்கு மேல் எந்த ஒரு பண பரிவர்த்தனை மேற்கொண்டாலும் அதை காசோலையாக தான் கொடுக்க வேண்டும் என்ற முறை உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. மார்க்கெட்டிற்கு கொடுக்க வேண்டிய பணம் என்று நான் சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்லியுள்ள பொய் என்றால் ? சரியல்ல. மார்க்கெட்டிற்கு நான் கொடுக்க வேண்டிய பணமா அல்லது வாங்க வேண்டிய பணமா என்றால் ? எனக்கு மார்க்கெட்டில் இருந்து வந்த பணம் ஆகும். மார்க்கெட்டில் இருந்து பணம் வந்ததற்கான பில் வைத்துள்ளேனா என்றால் ? பில் இல்லை. கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்றால் ? துரைராஜ் என்பவர் எழுதினார். எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ? எனது தோட்டத்தில் வைத்து எழுதப்பட்டது. கடனுறுதிசீட்டு எழுதுவதற்கு விபரம் யார் சொன்னார்கள்

என்றால் ? செல்வராஜ் சொன்னார். என்னுடைய விலாசத்தை நான் சொன்னேனா என்றால் ? செல்வராஜ் தான் சொன்னார். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், எனது விலாசம் செல்வராஜ் என்பவருக்கு தெரியாது என்றாலும் ? சரியல்ல. துரைராஜ் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ? புதுக்கோட்டையை சார்ந்தவர். புதுக்கோட்டை என்பவது எவ்வளவு தூரம் என்றால் ? எனது ஊரில் இருந்து 10 கி.மீ தூரம் இருக்கும். துரைராஜ் என்பவர் ஏற்கனவே எனக்கு தெரிந்தவர் என்றால் ? இல்லை. கடனுறுதிசீட்டில் சாட்சியாக வேறு யாராவது கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் ? ஈஸ்வரன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். ஈஸ்வரன் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ? ராமபட்டினம்புதுார். ராமபட்டினம் புதுார் என்பவது எனது ஊரில் இருந்து எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ? 8 கி.மீ துாரம் இருக்கும். பிரதிவாதி செல்வராஜ் என்பவரின் ஊர் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ? நான் பிரதிவாதி ஊருக்கு சென்றதில்லை. அதனால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் ஊர் ஒட்டன்சத்திரத்தில் இருந்து சுமார் 100 கி.மீ துாரம் இருக்கும் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. துரைராஜ் என்ன பேனாவில் எழுதினார் என்றால் ? மை பேனாவில் எழுதினார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் எழுதப்பட்டுள்ள வாசகங்களுக்கும், கையொப்பத்திற்கும் மை வேறுபாடு உள்ளது என்றால் ? இல்லை. துரைராஜ், ஈஸ்வரன் ஆகியோர்கள் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றாலும், செல்வராஜ் என்பவருக்கு யார் என்றே தெரியாது என்று சொன்னாலும் ? சரியல்ல. எனக்கும் செல்வராஜ் என்பவரை யார் என்றே தெரியாது என்றாலும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. எனக்கும் செல்வராஜ் என்பவருக்கும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை என்றால் ? சரியல்ல. கரூர் வேலுச்சாமி புரத்தை சார்ந்த ராமசந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. கரூர் வேலுச்சாமி புரத்தை சார்ந்த ராமசந்திரன் என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அவருடைய பினாமியாக இருந்து நான் செயல்பட்டு

வருகிறேன் என்றால் ? சரியல்ல. எனக்கு நேரடியாக தொகை ரூ.8,00,000 கொடுக்ககூடிய அளவிற்கு வசதிவாய்ப்புகள் இல்லை என்றால் ? சரியல்ல. மஞ்சநாயக்கன்பட்டியில் உள்ள தங்கவேல் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. தங்கவேல் என்பவர் ராமசந்திரனின் மாமனார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. ராமசந்திரனும், தங்கவேலும் தான் தாவா கடனுறுதிசீட்டினை போர்ஜரியாக தயார் செய்து என்னை வைத்து செல்வராஜ் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? சரியல்ல. செல்வராஜ் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் ? நான் படித்து பார்க்கவில்லை. எனது வழக்குரைஞரை படிக்க சொல்லி கேட்டும் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ? இல்லை. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானவை என்று நான் பதில் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில், பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்று நான் எனது சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சொல்லவில்லை. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுக்காத நிலையில் அதில் சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவை என்றால் ? சரியல்ல. செல்வராஜ் என்பவரை யார் என்றே தெரியாது என்றாலும், ராமசந்திரன் மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் சொன்னதன் அடிப்படையில் பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. ராமசந்திரன் மற்றும் தங்கவேல் ஆகியோர்களை எனக்கு யார் என்றே தெரியாது. தங்கவேல் என்பவர் இந்நீதிமன்றத்தில் செல்வராஜ் என்பவர் மீது அ.வ.எண்.73/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கும் இதே நீதிமன்றதில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை ராமச்சந்திரன் என்பவர் பினாமியாக பல நபர்களை வைத்து பல்வேறு நீதிமன்றங்களில் பிரதிவாதிக்கு எதிராக பல

வழக்குகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. அதில் நானும் ஒரு பினாமியாக இருந்து இவ்வழக்கை பிரதிவாதிக்கு எதிராக போர்ஜரியாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.03 17:25:41 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.202/2024**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துரைராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : வேலுச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தா.புதுக்கோட்டை | வயது | : சுமார் 39 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 03.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி நாட்டுத்துரையை எனக்கு தெரியுமா என்றால் ? பணம் கொடுத்ததால் எனக்கு தெரியும். நாட்டுத்துரை பணம் கொடுத்த போது யார் அழைத்து வந்தார்கள் என்றால் ? செல்வராஜ் என்பவர் தான் அழைத்தார். நாட்டுத்துரைக்கும் செல்வராஜ் என்பவருக்கும் என்ன பழக்கம் என்பது, எவ்வளவு நாட்களாக பழக்கம் என்பதும் எனக்கு தெரியாது என்றால் ? ஆமாம். நாட்டுத்துரையிடம் எவ்வளவு நாட்களுக்கு முன்பு பிரதிவாதி பணம் கேட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. பணம் கேட்டபோது எவ்வளவு பணம் கேட்டார் என்றும், எவ்வளவு தொகை கொடுப்பதாக நாட்டுத்துரை சொன்னார் என்றும் எனக்கு தெரியாது என்றால் ? சரிதான். பணம் கொடுத்த போது தான் தெரியும். செல்வராஜ் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ? குன்னத்தூர் அக்கரஹாரம் ஆகும். செல்வராஜ் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் ? இல்லை. செல்வராஜ் என்பவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றாலும், எந்த ஊரை சார்ந்தவர் என்ற விபரம் எனக்குதெரியாது என்றால் ? சரியல்ல. மனைவி பெயர் சங்கீதா ஆகும். மகன் பெயர் நகுலன், மகள் பெயர் ரூபிகா ஆகும்.எதற்காக வாதியிடம் பிரதிவாதிபணம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? குடும்ப செலவிற்காக

பணம் வாங்கியதாக சொன்னார். பிரதிவாதி குடும்ப செலவிற்காக பணத்தை பெற்று என்ன செலவு செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் ? அதெல்லாம் தெரியாது. தாவா கடனுறுதிசீட்டை தவிர வேறு கடனுறுதிசீட்டை நான் எழுதியுள்ளேனா என்றால் ? எழுதியுள்ளேன். வாசகங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் ? தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடனுறுதிசீட்டில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் ? முருகேசன் மகன் ஈஸ்வரன். சாட்சியின் தகப்பனார் பெயர், ஊர் பெயர் நான் தான் எழுதினேன். கையொப்பம் மட்டும் தான் சாட்சி கையொப்பம் செய்தார். கடனுறுதிசீட்டில் விலாசம் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களும், கையெழுத்து செய்துள்ள பேனா மைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் ? இல்லை. பிரதிவாதி வேறு போனவில் கையொப்பம் செய்தாரா அல்லது நான் எழுதிய பேனாவில் கையொப்பம் செய்தாரா என்றால் ? நான் எழுதிய அதே பேனாவில் தான் கையொப்பம் செய்தார். கடனுறுதிசீட்டில் உள்ள மை வேறாகவும், பிரதிவாதி கையொப்பம் செய்த பேனாவின் மை வேறாகவும் உள்ளது என்றால் ?சரியல்ல. ஈஸ்வரன் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ? ராமபட்டினம்புதுாரை சார்ந்தவர். கடனுறுதிசீட்டில் ராமபட்டினம் புதுார் என்பதை நான் எழுத்துப் பிழையாக எழுதியுள்ளேன் என்றால் ? ஆமாம். செல்வராஜ் என்பவர் யார் என்றே தெரியாது என்றாலும், நானும், ராமச்சந்திரனும், தங்கவேல் என்பவரும் சேர்ந்து பினாமியாக செல்வராஜ் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? தங்கவேல் என்பவரையும், ராமசந்திரன் என்பவரையும் யார் என்றே தெரியாது. இதே நீதிமன்றத்தில் வேறு வழக்கு சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ? இல்லை. தாவா கடனுறுதிசீட்டில் எழுதப்பட்டுள்ள தேதியில் பிரதிவாதி கடன் எதுவும் பெறவில்லை என்றும், பின் தேதியிட்டு போர்ஜரியாக கடனுறுதிசீட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. நான் செல்வராஜ் கடன் வாங்குவதை நான் பார்க்கவில்லை என்றாலும், பிரதிவாதி முன்னிலையில் கடனுறுதிசீட்டு எழுதப்படவில்லை என்றாலும் ?

சரியல்ல. நாட்டுத்துரை, ராமச்சந்திரன், தங்கவேல் ஆகியோர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க பொய்யாக ஒரு கடனுறுதிசீட்டை எழுதியுள்ளேன் என்றால் ? சரியல்ல. செல்வராஜ் என்பவரை யார் என்றே தெரியாது என்றாலும், அவர் கேட்டுக் கொண்டதற்கினங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.03 17:25:48 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்